வாக்காளர் சரிபார்க்கும் பணி - சென்னை தெற்கு மாவட்டத்தில்

5 தொகுதிகளிலும் அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆய்வு!

தொகுதி வாரியாக நேரில் சென்று ஆய்வு செய்தார்!

சென்னை,நவ.17- சென்னை தெற்கு மாவட்டத்திலுள்ள அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும், அதாவது சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், வேளச்சேரி, மதுரவாயல், சோழிங்கநல்லூர் ஆகிய சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஐந்து சட்டமன்றத் தொகுதிகளிலும் தேர்தல் ஆணையத்தின் அறிவிப்பின்படி கடந்த அக்டோபர் மாதம் 29ஆம் தேதி முதல் இம்மாதம் நவம்பர் 28 வரை புதிய வாக்காளர்களைச் சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும் - திருத்தம் செய்யவும் மனுச் செய்ய கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதுதவிர தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிக்கும் சனி, ஞாயிறு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச் சாவடி மையங்களில் காலை 9.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை சிறப்பு முகாம்களும் நடைபெற்று வருகிறது.

அதன்படி சென்னை தெற்கு மாவட்டத்தில் நடைபெறும் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணியினை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16-11-2024) காலை 10 மணி முதல் மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி 155வது வார்டில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி, பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன், தொகுதி மேற்பார்வையாளர் பாண்டிசெல்வம், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் வ.செல்வகுமார், மாமன்ற உறுப்பினர் கே.ராஜீ, வட்ட கழக செயலாளர் ஆ.செல்வம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்று வந்த வாக்காளர் சரிபார்க்கும் பணிகளை ஆய்வு செய்தார்.

விருகம்பாக்கம் சட்டமன்றத் தொகுதியில் காலை 12 மணிக்கு 128 வது வட்டம் மற்றும் 128 அ வட்டம் ஆகிய வட்டங்களில் சார்பில் செயின்ட் ஜான் பள்ளி மைதானத்தில் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, விருகம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் மு.ராஜா, தொகுதி மேற்பார்வையாளர் வே. உமாகாந்த், வட்ட கழக செயலாளர்கள் மு.கோவிந்தராஜன், வீ.ஏ. இராஜா ஆகியோர் மேற்பார்வையில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை பார்வையில் ஆய்வு செய்து அப்பணிகள் முடுக்கிவிடப்பட்டது.

அதற்குபின்பு சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் 139வது வட்டம் மாந்தோப்பு சென்னை உயர்நிலைப் பள்ளியில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், பகுதி கழக செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, தேர்தல் மேற்பார்வையாளர் பரிதி இளம்சுருதி, களக்காடி எல்லப்பன், வி.பி.ஜானகிராமன், சைதை சாதிக், அட்கோ கமலநாதன், ஜி.கே.ராமச்சந்திரன், பொ.பரத்குமார், டி.எஸ்.முருகன், அ.அயாத் பாஷா, சாந்திசுந்தரம் மற்றும் பாகமுகவர்கள் ஆகியோர் வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணிகள் மேற்கொண்டதை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் ஆய்வு செய்தார்.

மதியம் 1.45 மணியளவில் வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில் மேற்குப் பகுதி 177வது வட்டத்தில் வேளச்சேரி திரவுபதி அம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் வேளச்சேரி மேற்குப் பகுதி கழக செயலாளர் சு.சேகர், மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி பெ.மணிமாறன், வட்ட கழக செயலாளர்கள் பொ.த.மதிவாணன், ஜி.பி.எஸ். பாலசதீஷ் உள்ளிட்டோர் மேற்பார்வையில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் ஆய்வு செய்யப்பட்டது.

மதியம் 2 மணி முதல் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் மடிப்பாக்கம் 187 வட்டத்தில் ஹோலி ஏஞ்சல்ஸ் பள்ளியில் பகுதி கழக செயலாளர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், பகுதி துணைச் செயலாளர் திலகவதி, மாமன்ற உறுப்பினர்கள் ஷர்மிளா ஜெய், சமீனா செல்வம், வட்ட கழக செயலாளர்கள் எம். கே.ஜெய், சுரேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை ஆய்வு செய்தார். சென்னை தெற்கு மாவட்டத்தில் மிகவும் சிறப்பாக அனைத்து இடங்களிலும் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளில் கழகப் பொறுப்பாளர்கள் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது. இறுதியாக மடிப்பாக்கத்தில் கழக பி.எல்.ஏ.2 நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகளுக்கு மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய உணவு இடைவேளைக்குப்பின்பு 4 மணி முதல் சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் இரண்டாவது பகுதி 196வது வட்டத்தில் கண்ணகி நகரில் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், பகுதி செயலாளர் வி.இ.மதியழகன், தொகுதி மேற்பார்வையாளர் என்.சந்திரபாபு, பி.என்.ஜோதி, டி.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

முதலமைச்சர் வருகின்ற 30-ஆம் தேதி சென்னை, வால்டாக்ஸ் சாலையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகள் கட்டடம் கட்டுவதற்கான அடிக்கல் நாட்டும் பணிகளுக்கான முன்னேற்பாடுப் பணிகள் குறித்தும், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் பிற துறைகளின் பணிகள் குறித்தும் இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் பி.கே.சேகர்பாபு தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நேற்று (16.11.2024) சென்னை, ரிப்பன் கட்டட வளாக அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மேயர் திருமதி ஆர்.பிரியா, தமிழ்நாடு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, ஆணையாளர் ஜெ. குமரகுருபரன், வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம் பந்தலூரில் கலைஞர் நூலகம்!

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

உதகை, நவ. 17- நீலகிரி மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், கூடலூர் சட்டமன்ற தொகுதி பந்தலூரில் அமைக்கப்பட்ட "கலைஞர் நூலகத்தை" மாநில இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் பிரகாஷ் தலைமையில், மாவட்ட கழக செயலாளர் பா.மு.முபாரக், தேர்தல் பணி செயலாளர் அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் முரளிதரன், நவுபல், பாபு, நாகராஜ், பத்மநாபன், வினோத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில், நீலகிரி மாவட்ட பொறுப்பு அமைச்சர் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சசிகுமார் வரவேற்றார். நெல்லியாளம் நகர செயலாளர் சேகரன் நன்றி கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்டப் பொருளாளர் நாசர் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் திராவிட மணி, காசிலிங்கம், ராஜூ, மாநில அணிகளின் துணை செயலாளர்கள் பொள்தோஸ், வாசிம்ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் லியாகத் அலி, சிவானந்த ராஜா, சுஜேஷ், கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜா, அமிர்தலிங்கம், தொரை, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ராஜேந்திரன், பேரூர்க் கழக செயலாளர்கள் சின்னவர், சுப்ரமணி, உதயகுமார், அணிகளின் அமைப்பாளர்கள் சிவசுப்ரமணியம், ஆலன், சீனிவாசன், கோமதி, ஜெயந்தி, அன்வர் அப்துல்லா, உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்கள் சிவகாமி, பரிமளா, கீர்த்தனா, வள்ளி, சித்ராதேவி, டெர்மிலா மற்றும் அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட நகரஒன்றியபேரூர் கழக இளைஞர் அணியினர், பொது மக்கள்உள்ளிட்டஅனை வரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தினர்.

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் துறை சார்பில் பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சேம்பர்ஸ் காலனி, நியூ காலனி, நாகல்கேணி பகுதிகளில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட குழந்தைகளின் ஊட்டச்சத்தை உறுதிசெய் 06 வயது பச்சிளம் குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்து கொண்டு தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகத்தை வழங்கினார். உடன் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி கார்த்திகேயன், குழந்தை திட்ட அலுவலர் சாந்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சிதம்பரனார் 88-வது நினைவு நாள் - தியாகத் திருநாள்!

சிலைக்கு அமைச்சர் பெருமக்கள் மலரஞ்சலி செலுத்துகின்றனர்!

சென்னை, நவ. 17- கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 88வது நினைவு நாளான "தியாகத் திருநாள்" நவம்பர் 18 அமைச்சர் பெருமக்கள் வ.உ.சி. அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர்கள் தூவி அஞ்சலி செலுத்துவார்கள்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களின் நினைவு நாளை "தியாகத் திருநாள்" எனக் கடைப்பிடிக்கு மாறு 3.9.2021 அன்று அறிவித்தார்கள். அதன்படி, தமிழ்நாடு அரசின் சார்பில், அமைச்சர் பெருமக்கள், கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி அவர்களின் 88வது நினைவு நாளான தியாகத் திருநாள் 18.11.2024 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் முதலமைச்சர் அவர்கள் நிறுவியுள்ள கப்பலோட்டிய தமிழரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவார்கள்.

செக்கிழுத்த தியாகச் செம்மல், "கப்பலோட்டிய தமிழன்" வ.உ.சிதம்பரனார் அவர்கள், தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரத்தில் உலகநாதன் பிள்ளை பரமாயி அம்மையார் தம் பதியருக்கு 5.9.1872 அன்று மகனாகப் பிறந்தார்கள். ஒட்டப்பிடாரத்தில் அடிப்படைக் கல்வியையும், தூத்துக்குடியில் உயர்நிலைக் கல்வியையும் சட்டக் கல்வியைத் திருச்சியிலும் பயின்று வழக்குரைஞர் ஆனார்கள்.

வ.உ.சிதம்பரனார் அவர்கள், சமூக சேவையிலும் அரசியல் பணியிலும் படிப்படியாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார். தாய் நாட்டின் விடுதலைக்காகத் தமிழகத்திலிருந்து பங்கேற்ற தலைவர்களில் முதன்மையானவர் வ.உ.சிதம்பரனார். அரசியல் வாழ்க்கையில் பாலகங்காதர திலகரைத் தமது குருவாக ஏற்றுக் கொண்டு ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தை அடியோடு ஒழித்திடப் பாடுபட்டார். ஆங்கிலேயரின் கப்பல் வாணிகத்தை முறியடித்திட அரசியல் ரீதியாகவும், வணிக ரீதியாகவும் "சுதேசி நாவாய்ச் சங்கம்" என்ற கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார். இதனாலேயே "கப்பலோட்டிய தமிழன்" என்று பெயர் பெற்றார்.

வ.உ.சிதம்பரனாரின் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகளால் கோபமடைந்த ஆங்கிலேயர்கள், அரசாங்கத்தை அவமதித்ததாகவும், சுதந்திரத்திற்காகப் பொதுமக்களைத் தூண்டியதாகவும் அவர் மீது வழக்குப் பதிவு செய்து, இரட்டை ஆயுள் தண்டனை வழங்கினார்கள். இதன் காரணமாக, 1908ஆம் ஆண்டு கோவை சிறையில் அடைக்கப்பட்டு வ.உ.சி. அவர்களை செக்கிழுக்க வைத்தார்கள்.

தமிழ்நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பல்வேறு இன்னல்களுக்கு இடையிலும், தாய்மொழி தமிழ்மொழி மீது கொண்டிருந்த தணியாத பற்றின் காரணமாக பல அரிய நூல்களையும், சுயசரிதையையும் கவிதை வடிவில் எழுதினார். தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தூத்துக்குடியில் வ.உ.சி அவர்களுக்குச் சிலை நிறுவி 5.9.1972 அன்று பிரதமர் இந்திரா காந்தி அவர்களை அழைத்துத் திறந்துவைத்தார்கள். அப்போது, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளின்படி, 1975 முதல் 1976 வரை தூத்துக்குடியில் கட்டி முடிக்கப்பட்ட 4 கப்பல் தளங்களுக்கு ஒன்றிய அரசினால் செக்கிழுத்த செம்மல் வ.உ.சி அவர்களின் பெயர் சூட்டப்பட்டது. 1998ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் எழுதிய 16 நூல்களும் அரசுடைமையாக்கப்பட்டன.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.9.2021 அன்று சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பின்படி, நம் தேசத்தின் விடுதலைக்காகத் தம்மை அர்ப்பணித்தும் அயராது பாடுபட்டும், தாய் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் பெருமை சேர்த்து, மறைந்தும் மக்களின் மனங்களில் என்றும் நிறைந்தும் வாழ்கின்ற கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 88வது நினைவு நாளான நவம்பர் 18 அன்று "தியாகத் திருநாள்" ஆக ஆண்டுதோறும் தமிழ்நாடு அரசின் சார்பில் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் மேயர், நாடாளுமன்ற உறுப்பினர், துணை மேயர், உள்ளாட்சி பிரநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பிப்பார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் ஜெயா அறிவியல் மற்றும் கலை கல்லூரியில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மற்றும் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மாபெரும் வேலை வாய்ப்பு முகாம் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெற்றது. இதில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் கலந்துகொண்டு முகாமை துவக்கி வைத்து 648 நபர்கள் பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த.பிரபுசங்கர், பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகர் ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, வேலைவாய்ப்பு மண்டல இணை இயக்குநர் சென்னை இ.ர.தேவேந்திரன், திருவள்ளூர் வருவாய் கோட்டாசியர் கற்பகம், மாவட்ட வேலைவாய்ப்பு தொழிநெறி வழிகாட்டும் மைய அலுவலர் விஜயா, மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் டி.தேசிங்கு, நகர மன்ற தலைவர் உஷாராணி ரவி, திருநின்றவூர் நகராட்சி ஆணையர் செல்வி.கீர்த்தனா, கல்லூரி தாளாளர் கனகராஜ், அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.